JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//74/2026 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | மாடசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி விமல் ராஜ் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 6 வருடங்களுக்கு முன்பு காலை 10.30 மணியளவில் திருமலாபுரம் ரோட்டில் உள்ள எங்களுடைய தோட்டத்திற்கு இளநீர் களவு போனதை விசாரிப்பதற்காக போலிசார் வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து படம் வரைந்து கொண்டார்கள். அதில் நானும், சாட்சி பெருமாளும் கையொப்பம் செய்தோம். பின்னர் 12 மணியளவில் எங்கள் தோட்டத்தில் இருந்து இளநீரை கட்டி வைத்த டிவிஎஸ் வாகனம் என நினைக்கிறேன். சரியாக நினைவில் இல்லை. போலிசார் அந்த வாகனத்தை எடுத்து கொண்டு சென்றார்கள். அதற்கான சாட்சியாக நானும், பெருமாளும் கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகஜர் அசாஆ.2, அத்தாட்சி அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுத, படிக்க தெரியும். இந்த வழக்கின் புகார் தாரர் அசா.1 எனக்கு மைத்துனர் உறவு. என்னுடைய தோட்டத்திற்கு நான் சென்றேன். சம்பவ இடத்திற்கு இரண்டு போலிஸ் வந்தார்கள். போலிஸ் காவல் உதவி ஆய்வாளரா, ஆய்வாளரா, ஏட்டா என்று தெரியாது. போலிஸ் எழுதி இருந்ததை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். போலிஸ் விசாரித்ததை வாக்குமூலமாக எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நாளில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் என் முன்பு இருசக்கர வாகனம் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்து விட்டு அசா.1 என் உறவினர் என்பதாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்கவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//74/2026 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | பெருமாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 நடராஜன் என்பவரை தெரியும். என்னுடைய கிணற்று பங்காளி. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 6 வருடங்களுக்கு முன்பு எங்களுடைய கிணற்றில் 100 க்கு கீழே இளநீர் திருடு போய்விட்டதாக கேள்விப்பட்டேன். திருமலாபுரம் சவரிமுத்து என்பவர் இளநீரை திருடியதாக கேள்விப்பட்டேன். திருடு போன இளநீர்களின் மதிப்பு ரூ.1700,ரூ.1800 இருக்கும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அசா.1 நடராஜன் எனக்கு மச்சினன் உறவு. எங்களுடைய கிணற்றில் 100 இளநீர்க்கு கீழே காணாமல் போனதாக தான் போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்னது போல் எந்த சம்பவத்தையும் கேள்விப்படவில்லை என்றாலும் அசா.1 என்

உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//74/2026 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | நடராஜன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் பக்கத்து ஊர்க்காரர். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பு இரவு 2 மணியளவில் கம்ப்ரசர் மோட்டாரை போடுவதற்காக என்னுடைய வயலுக்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரி என்னுடைய மரத்தில் இருந்த 90 இளநீரை வெட்டி இருசக்கர வாகனத்தில் கட்டி கொண்டிருந்தார். நான் யார் என்று கேட்ட போது எதிரி சவரிமுத்து என்று கூறினார். பின்னர் நான் போலிசில் சொல்லபோகிறேன் என்று கூறியதும் வாகனத்தை அங்கேயே போட்டு விட்டு என் கையை தட்டி விட்டு ஓடி விட்டார். இளநீர்களின் மதிப்பு ரூ.1800 இருக்கும். பின்னர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்றேன் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான் மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல்தான் புகாரிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க சென்ற போது விசாரித்தது தவிர வேறு நாளில் விசாரிக்கவில்லை என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். எதிரியை இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் பக்கத்து ஊர்க்காரர் என்பதால் தெரியும். 7,8 ஆண்டுகளாக எதிரியை தெரியும். எனக்கு 25 மரக்கால் விதைப்பாடு உள்ளது. அதில் 14 தென்னை மரம் உள்ளது. என் இடத்தை சுற்றி நிறைய விவசாய நிலம் உள்ளது. அதில் தென்னை மரங்கள் உள்ளது. எங்கள் ஊரில் தான் சேர்ந்தமரம் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயர் முகவரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவரை எனக்கு முன்பே தெரியும். 90 இளநீரை போலிசாரிடம் ஒப்படைத்து விட்டோம். 90 இளநீரின் மதிப்பு யார் கணக்கிட்டு சொன்னார் என்றால் நாங்கள் இளநீர் இறக்குவோம் அதனால் தெரியும். நான் ஊரில் எதுவும் பொறுப்பில் இருந்தேனா என்றால் இல்லை.

எனக்கு காவல்நிலையத்தில் லோடு மேனாக இருப்பதால் பழக்கம் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வேலையாக செல்வேனா என்றால் நாங்கள் 7,8 பேர் யாரையும் கூப்பிட்டாலும் செல்வோம். நான் சொல்வது போல் சொன்ன நாளில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இளநீர் எதுவும் திருடு போக வில்லை என்றாலும், போலிசார் நல்ல பழக்கம் என்பதால் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi